ஈ) சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

மாண்புமிகு சட்ட பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் மெட்ராஸ் சிட்டி சிவில் கோர்ட்டிலே சில வழக்குகள், ஸ்மால் காசஸ் கோர்ட்டினுடைய வழக்குகள், சிட்டி சிவில் கோர்ட்டிலே உயர் நீதி மன்றத்தால் மாற்ற செய்யப்பட்டு வரக்கூடிய நிலையும், இதனால் சிட்டி சிவில் கோர்ட்டு வழக்குகளுடைய எண்ணிக்கை அதிகமாக ஆகி அங்கே வழக்குகள் எல்லாம் தாமதமாக முடக்கப் படுவதற்கு என்ற முறையில் இருந்த காரணத்தால் அதை மாற்றி ஸ்மால் காசஸ் கோர்ட்டு, மெட்ராஸ் சிட்டியிலேயே அந்த வழக்குகளை அங்கே அவர்களே எடுத்து நடத்த வழி செய்கிற இந்த சட்டத்தை அவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம் மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம் மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.